# மனிதா உன்னையே நீ அறிந்துகொள்




திருமூலர் சங்கத்தின் காப்பாளரும் எமது
குருநாதருமான ஸ்ரீ சி. இராமநாதன் அவர்களது
தொண்ணூறாவது பிறந்த நாள் நினைவாக
இச்சிறு மலர் வெளியிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GRATITUDE TO OUR GURU



Thirumoolar Sangam recalls its duty to honour their Guru

Thirumoolar Ramanathan on the 90th Birth Day falling on 2.12.2001 and residing at No 10, Murugan Place, Wellawatha in continuing his lectures and discourses for those visiting him and the Sangam request all interested in Thirumanthiram to participate and clear their doubts and to blessed by him which is a Graceful blessing never to the missed.

Thirumoolar Sangam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளைக் காண்பீரோ?

* தலையை நிலத்தில் நிறுத்திப் பார்த்தால் இறைவனாவீரோ?
* காலை மேலே ஏற்றிப் பார்த்தால் கடவுளைக் காண்பீரோ?
* மலைமே லேறி மவுனஞ்ச் செய்தால் மகாதேவனைக் காண்பீரோ?
* சிலைபோ லிருந்து சிந்தித்துப் பார்த்தால் தேவனைக் காண்பீரோ?
* கலைகள் பலவும் கற்று விட்டால் கங்கா தரனைக் காண்பீரோ?
* விலைக்குப் புத்தகம் வேண்டிப் படித்தால் விமலனைக் காண்பீரோ?
* பாலைக் குடித்துப் பட்டினி கிடந்தால் பரமனைக் காண்பீரோ?
* வேலை செய்யாமல் வீதியில் திரிந்தால் வேந்தனைக் காண்பீரோ?
* மூலையில் இருந்து முணு முணுத்தால் முதல்வனைக் காண்பீரோ?
* சாலப் பசிக்கு ஒரு போது புசித்தால் சாமி யாவீரோ?

**என்று யோகர் சுவாமிகள் தமது நற்சிந்தையில் கூறியிருக்கிறார்.**

* மனிதா! நீ சிவத்தின் அம்சம் அல்லவா?
* மறந்து போனாயா?
* உண் முழு மனதோடும "ஓம் தத் சத் ஓம்" என்று சொல்லு.
* இறைவனிடம் உண்ணை ஒப்புக்கொடு.
* சிவத் தியானத்தை அசட்டை பண்ணதே.
* ஈற்றில் யாவும் நன்மையாக முடியும்.
* ஆத்மாவாக இயங்கும் நீயே, இறையாய் இயங்கும் அதுவாவாய்,.
* ஆம் நீ யாவையும் அறியும் அறிவு மயமாய் விளங்குகின்றாய்.
* கீழ்க்கானும் திருமந்திரம் இதனை விளக்குகின்றது.

  எல்லாம் அறியும் அறிவுதனை விட்டு
  எல்லாம் அறிந்தும் இலாபம் அங்கில்லை
  எல்லாம் அறிந்த அறிவினை நானென்னில்
  எல்லாம் அறிந்த இறை யெனலாமே

* சீவனே சிவனென்றும் அதனையன்றி இறை வேறில்லை என்று எல்லா யோகிகளும் ஞானிகளும் கூறுகிறார்கள்.
* அதனால் ஆத்மாவாகிய நீ "ஓம் சிவாயநம" என்னும் இறை நாமத்தை ஓதி வருவாயானால் நீயும் சிவமயமாகலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THIRUMOOLAR SANGAM

No - 3, Ridgway Place,
Bambalapitiya,
Colombo-4.

## Patrons Report

It is my pleasure to narrate the progress made in bringing "Thirumanthiram" to the heart and mind of the Hindus. Thirumanthiram is a spiritual treatise composed 8000 years ago by sage Thirumoolar. I call it pleasure to radiate Thirumanthiram as I am reaching my 90th year on earth on December-2-2001 and the task of radiating Thirumanthiram was under taken by me almost 3 decades ago.

I have always had a keen interest to know the truth and the value behind idol worship. In my voyage of knowing the truth I have listened to sages and scholars. I have met exponents of philosophies of other religions because as an officer in the diplomatic service of the state. My work took me to many parts of the world which deepened my search for the Truth.

Meeting Yogar Swamy of Jaffna had an impact on me and later I met the sage along with Satguru Sivaya Subramuniya Swami of the Hawai temple and received the sages blessings. The latter mentioned Satguru shed his mortal coil on 12-11-2001, and his shipendous effort to promote Saivaism can be seen in the epicentre of Iraivan Ashram in Hawai attracting Hindus and others there. His work of radiating the knowledge in Thirumanthiram and endeavour to translate the treatise are great strides to bring the truth to the wider public.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Forty years ago as a state Diplomatic officer, I had the opportunity to traverse the globe, this was a boon to me to enrich my knowledge of Truth. I had met sages and intellectuals of other religions in addition to Hindu holy men and intellectual. I then came to the conclusion that Thirumanthiram contains the Truth in a dynamic and complete manner and took the daring step to promote its contents far and wide through articles in news papers, discussions with men of learning and under standing and by means of lectures, I radiated "Thirumanthiram"

The Colombo Tamil Sangam responded to my sincere efforts and provided me the opportunity to give a series of discourses there. Along with my friend Dr.S.Manickarajah I travelled to the city of Jaffna and spread the knowledge in Thirumanthiram, kindling public interest.

In the latter eighties I was getting older and impressed with my sincerity the late Mr.R. Kalyanasundram and Mrs. Selvam Kalyanasundaram took steps to facilitate my having weekend discourses on Thirumanthiram at their spacious hall in their home at 3, Ridgway Place, Colombo - 04. These weekend lectures gave me and the listeners a great push and I published a book and small pamphlets on Thirumanthiram. Thirumanthiram was brought there to a wider public. The Thirumoolar Sangam founded in 1988 an organisation without any collection of funds flourishes on the momentum of Mrs. Selvam Kalyanasundaram. Through Meditation and discourse, the Sangam still holds the minds of those



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

interested. The hospitality received there is immense. The participants in the discourses are given refreshment and food. I must say here that it is at Ridgeway Place, that Thirumanthiram is radiated by the Thirumoolar Sangam without any formalities of fund collecting or organising but held together by the intense spiritual power radiating there. Thirumanthiram is lived at the weekend session there in accordance with the Thirumanthiram verse:-

"மூலன் உரைத்த மூவாயிரம் பாடல்
ஞாலம் உய்யவே நந்தி..........."

Thirumoolar's invisible presence and blessing is taking people forward at the weekly sessions. On my 90th Birthday, looking back, I am grateful to the higher powers to have endowed me with the knowledge of Thirumanthiram, to live and radiate it far and wide. My entire being is immersed in it and all day and night I live and experience Thirumanthiram. Thirumanthiram is a great Spiritual treatise emphaising "the Jeeva in Siva" our Yogar Swami's immortal saying. Seevan than Sivan means just that.

Knowledge of Thirumanthiram takes the average man in the mandane field to a higher understanding The Truth and self are revealed in Thirumanthiram and my message on my 90th Birthday is to radiate Thirumanthiram far wide, from home to society and to the world.

AUM

*S.Ramanathan*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THIRUMOOLAR SANGAM

No - 3, Ridgway Place,
Bambalapitiya,
Colombo-4.

## Thirumoolar Ramanathan

For an officer of the state who later entered the diplomatic service of the state to have achieved the appellation of Thirumoolar before his name is an achievement of immense excellence.

Thiru Ramanathan is Celebrating his ninetieth birthday on December 2nd 2001. He is the patron of Thirumoolar Sangam functioning at 3, Ridgeway Place, Colombo - 04. He gave the initial impetus in captivating the listeners and acquainting them with Tirumanthiram composed by sage Thirumoolar. Thirumanthiram is placed later in the Codification of Tamil devotional works called Thirumurais although anterior in time to the body of devotional works nunbering twelve.

Thirumanthiram is ascribed an earlier time in accordance with the Tamil script employed in the composition called "VATTELUTHU" (வட்டெழுத்து) This composition forms the basis of Saiva worship. The yeomen service done by Thirumoolar Ramanathan by his discourses and written commentaries on Thirumanthiram has simplified the complexity of the work of 3000 verses. Those who have listened to his explanations on every weekend since the beginning of the Thirumoolar Sangam at 3, Ridgeway Place, Colombo - 4 in the year 1988 up to about three



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

years ago cannot - but think of him gratefully young in mind and enthusiastic about Thirumanthiram up to date. The Hindu public is indebted to him for his inspired discourses and written commentaries on Thirumanthiram.

Thirumanthiram is the work of a sage of great potential and versatility. Thirumoolar was proficient in astronomy and medicine (SIDDHA) and is named first among the foremost 18 Siddhas. His composition remained enshrouded from the public until two decades, ago when its meaning was made known to the wider public. Thirumoolar Ramanathan in one of the decoders of the momentous work.

Thirumoolar Sangam wishes its patron a fulsome life and is continuing his work on weekend Saturdays on Thirumanthiram. Thirumoolar Ramanathan is a beneficent emissary of the sages. He has worked energetically to bring Thirumanthiram to every Hindu home.

*Miss. K.Kumarasinkam*, *B.sc. (Econ) London.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மனிதனே இறைவன் ஆவான்"

"ஏ மனிதா! நீ இறைமயம் ஆனவன்."

திருமூலர், யோகர், மணிவாசகர், ஔவையார், பட்டினத்தார் முதலிய ஞானிகள் இதனை, உறுதிப்படுத்துகின்றனர்.

சிவபுராணத்தில் மணிவாசகர் பல்வகைப் பிறப்புகளைப் பற்றிக் கூறுகிறார். அவற்றை அஃறிணையான "புல்லு பூண்டில்" தொடங்கி உயர்திணையான "மனிதப் பிறப்பில்" முடிக்கிறார். மனிதப் பிறவியே இறுதியானதும் மேலானதுமான பிறவி.

"Human Creation is the Cream of Creation - but ones the soul leaves the body, Nobody wants the body." என்று ஆங்கிலத்தில் கூறுகிறார்கள்.

யேசுகிறீஸ்து நாதர், முகமது நபிகள் நாயகம், புத்தர் பிரான் எல்லோரும் தாம் வாழ்ந்த காலத்தில் மக்களுடன் மக்களாக வாழ்ந்தவர்கள். இவர்கள் மனிதப் பிறவிக்கு சிறந்த உதாரண புருடர்களாக வாழ்ந்தவர்கள்.

வாழும் பொழுது அவர்களை மதிக்காத சமுதாயம், அவர்கள் மறைந்த பின், அவர்களது போதனைகளை மதித்துப், போற்றி அவரவர்கள் பெயரால் தனித்தனி மதங்களை ஏற் படுத்தி வணங்கி வருகிறார்கள்.

இதிலிருந்து மனிதனே இறைவனாகும் திறத்தவன் என்பது தெளிவாகின்றது.

இதை அறியாத மனிதன் கடவுளை வெளியே தேடி அலைகின்றான். தன்னை, தன்திறனை அறியாது திரிகின்றான். யாழ்ப்பாணத்தில் எம் மத்தியில் வாழ்ந்து, எமக்கு பல நற்சிந்த னைகளை எடுத்து கூறிய யோகர் சுவாமிகள்,

தன்னை அறிய தனக்கு ஒரு கேடில்லை
என்று முன்னைப் பெரியோர் மொழிதனரால்
தென்னை பனை சோலை வாழ் இலங்கைச் சிவநேயச்
செல்வர்களே தேரீர் சீவன் தான் சிவன்.

என்று "மனிதனே இறைவன்" என்று கூறியிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீவன் என்பது மானிடப் பிறப்பு எடுத்த மக்களைக் குறிக்கும். மானிடப் பிறப்பை பெற்றவர்களுக்கு ஆறாவது அறிவாகிய பகுத்தறிவு உண்டு. அதன் மூலம் மற்ற உயிர் களிலும் பார்க்க எதையும் பகுத்து அறிந்து நீதியாக நடுநிலை தவறாது வாழ்க்கையை நடத்தக் கூடியவனாக மானிடன் விளங்குகிறான் என்பது தெளிவு. இப்படி நீதி தவறாது பிறருடன் அன்பு பாராட்டி, எவ்வுயிரையும் தன்னுயிர் போல நேசிப்பதால் அவன் இறைமயம் ஆகின்றான்.

தன்னை அறிய தனக்கொரு கேடில்லை
தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை அறியும் அறிவை அறிந்த பின்
தன்னை அர்ச்சிக்கத் தானிருந் தானே.

என்று எவன் ஒருவன் தன்னை அறியும் அறிவைப் பெற்றால், அவனை சிவமாக எண்ணி உலகம் போற்றும்.

உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்பினில் உத்தமன் கோயில்கொண் டானென்று
உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே.

மேலும், மனித பிறப்பின் மேன்மையையும், மனித உடலே இறைவன் குடியிருக்கும் கோயில் என்பதையும் இற்றைக்குச் சுமார் 8000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த முதுபெரும் சித்தர் திருமூலர், உறுதிப்படுத்துகிறார்.

ஒருவனு மேஉல கேழும் படைத்தவன்
ஒருவனு மேஉல கேழும் அளந்தான்
ஒருவனு மேஉல கேழும் கடந்தான்
ஒருவனு மேஉட லோடுயிர் தானே.

ஏழு உலகங்களையும் படைத்து, அவற்றிற்கு வேண்டிய வற்றை கொடுத்துக் காப்பாற்றியும், அவற்றைக் கடந்து உடலோடு உயிராய் கலந்தும் ஒன்றியிருப்பவனே சிவன்.

அந்தச் சிவனே முத் தொழில் புரியும் மும் மூர்த்திகளாயும், திரி சக்திகளாயும் விளங்குகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தச் சக்தியே உடலோடு உயிரை இணைக்கிறது; காப்பாற்றுகிறது; பிறகு இரண்டையும் பிரிக்கவும் செய்கிறது.

இத்தகைய ஆற்றல் மிக்க சக்தியாக விளங்கும் சிவனுடைய திருவடிப் பெருமையை யார் அறிவார்?

அவன் மனிதனின் உடலை இடமாகக் கொண்டு எழுந்தருளி இருப்பதை யார் அறிவார்?

அறுபத்து எட்டுத் தத்துவங்களாயும், இருவகை மேனி யாகவும் விளங்குவதை யார் அறிவார்?

அவர் மூலாதாரச் சக்கரத்திலிருந்து உடலையும் உயிரையும் காப்பதை யார் அறிவார்?

திருவருட் துணை இல்லாமல், திருவடியின் பெருமையை அறியும் வண்மை உடையார் யார்?

மனித உடல் சிவனுக்கு சிறந்த உறைவிடமாகியும், அத்துடன் நடமாடும் கோயிலாகவும், அவ்வுடலுக்கு அவனே காவலனாகவும் உற்ற துணையாகவும் இருப்பதை யார் அறிவார்? என்பதை,

ஆரே அறிவார் அடியின் பெருமையை
ஆரே அறிவார் அங்கவர் நின்றது
ஆரே அறிவார் அறுபத்தெட் டாக்கையை
ஆரே அறிவார் அடிக்காவ லானதே.

என்று, கூறுவார் திருமூலர்.

திருவள்ளுவரும் தமது குறளில்,

காமம் வெகுளி மயக்க மிவை மூன்றின்
நாமம் கெடக் கெடும் நோய்.

என்று காமம், வெகுளி மயக்கம் இம்மூன்றையும் இறைவன் அருளால் கடிதல் வேண்டும். அவ்வாறு கடிந்த நிலையில் சிவனின் திருவடிப் பேற்றின்பம் கைகூடும்.

இவ்வின்பத்தைப் பெற்றால், மணியை அடிக்கின்ற போது எழுகின்ற ஓசை போலும் "ஓம்" என்னும் பிரணவ நாதத்தில் ஒடுங்கிச் சிவன் ஒளியில் கலக்கலாம். இதன் மூலம் அவ்வுயிர் சிவரூபமாகிறது.

உள்ளத் தொருவனை உள்ளுறு சோதியை
உள்ளம் விட்டோரடி நீங்கா ஒருவனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளமும் தானும் உடனே இருக்கினும்
உள்ளம் அவனை உருவறி யாதே.

என்பதன் மூலம் எங்கள் உள்ளத்தில் இருக்கும் உண்மை யான பொருளை அறியாது இருக்கின்றோம்.

இருப்பது பொய் போவது மெய்
என்று எண்ணி நெஞ்சே ஒருத்தருக்கும்
தீங்கினை எண்ணாதே...

எனப் பட்டினத்தாரும் கூறுவார்.

ஆதலால் அவ்வுயிர் உயர்நிலை அடைகின்றது.

இன்று எங்கள் மத்தியில் 90வது வயதை எய்தி வாழ்ந்து வரும் பெரியார் திரு. எஸ். இராமநாதன் அவர்கள் மேற்கூறிய படி திருமந்திரத்தின் அடிப்படையில் வாழ்பவர்.

அவர், இறைவன் என்றும், எங்கள் உள்ளத்தில் இருக் கிறான், அதை நாம் அறிந்துணர்ந்து நமது பிறவிப் பயனை அடைய வேண்டும் என்ற கூறுகிறார்.

"ஒரு நாள் ஒரு பொழுதாயினும் சிவன் நாமம்
உச்சரிக்க வேண்டும்...........
"சிவாய நம என்று சிந்தித்து இருப்போர்க்கு
அபாயம் ஒரு நாளும் இல்லை...........

என்று மக்கள் நலம் பெற நன்மார்க்கம் காட்டும் என்னும் எண்ணத்துடன் வாழ்ந்து வருகிறார். அவரை நேரில் காண்பதும் பழகுவதும் மனிதனாகப் பிறந்த எமக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

சைவசமயமே சமயம் சமயாதீதப் பழம்பொருளைக்
கைவந்திடவே மன்றுள்வெளி காட்டுமிந்தக் கருத்தைவிட்ப்
பொய்வந்துழலுஞ் சமயநெறி புகுத்தவேண்டாம் முத்திதரும்
தெய்வசபையைக் காணபதற்குச் சேரவாரும் சகத்தீரே. என்று
அனைவரையும் அழைத்து மெய்ச் சைவனாக, சிவமயமதாக
வாழ்வாங்கு வாழ அழைக்கிறோம்.

ஆ.அரசரத்தினம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சிவமயமாக வேண்டும்."

"கல்லாத மூடன் திருவுருப் பெற்றிடில் செல்லாத தென்ன செயல்" என்று கூறினாள் ஔவை பிராட்டியார். ஆதலால் சமயம் என்பது உணரப்பட வேண்டியதொன்று. அது வெறும் சாத்திர ஞானத்தாலும் சமய சடங்குகளினாலும் அறியப்படுவ தொன்றல்ல என்பதை நாம் தெளிதல் வேண்டும்.

சிவனேயச் செல்வர்களே!

கலியுகத்திற்கான சிவாகமத்தை வகுத்துத் தந்த முதுகிழவன் திருமூலன். அவனது திருமந்திரத்தை பொருளுணர்ந்து கற்றவன் மக்களிடையே பேதங் காணமாட்டான்.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்.
அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந் திருந்தாரே.

சிவநெறி என்பது மனிதன் சிவமயமாக ஆகும் பேற்றைப் பெறுவதற்கு கடைப்பிடிக்க வேண்டிய வாழ்வியல் நெறி.

இறைவனின் தடத்த லட்சணங்களில் ஒன்று "தன்னிலமை மன்னுயிர்கள் சாரத் தரும் சக்தியில் பின்னமிலாமை". அத்தகையவன் ஆன்மாக்களாகிய மனித இனத்தைத் தன்வயப்படுத்தியே தீருவான்.

சிவனை அண்டிய தொண்டன், சிவமயம் ஆகுவான். அவன் சலமிலன். அவன் பார்ப்பது எல்லாவற்றையும் சிவமயமாகக் காண்பான். இதுவே சிவத் தொண்டனின் மெய்நிலை. அவன் அன்பெனும் மனித நேயமும், ஆன்மீக உணர்வும் உள்ள காரணத்தால் அனைத்திலும் சிவத்தைக் காண்பவன். மனிதரிடம் பேதம் காணமாட்டான். பேதம் காண்பவன் மனிதரிடம் மறைந்திருக்கும் பரத்தை அறியமாட்டான்.

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதற் பூதமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவத் தொண்டென்பது ஆன்மநேய ஒருமைப்பாட்டுடன், உயிரிரக்கமும் இணைந்தது. துன்புறும் ஏழைகளை அரவணைப்பதும், அனாதைகளுக்கு அன்பு செய்வதும், அவர்கள் வாழ வழி காட்டுவதும், பெற்றோரை இழந்து தவிக்கும் குழந்தைகளுக்கு தாயினும் சாலப் பரிந்து அன்பு செய்வதுமே சமய வாழ்வு.

அதை விடுத்து கோடிக்கணக்கான பணத்தை செலவு செய்து கோவில்களும் கோபுரங்களும் கட்டி, அபிசேக ஆராதனைகள் என. பணந்தேடும் வர்த்தக மயமாக்கல் அல்ல சமய வாழ்வு. என்பதை உணரவேண்டும். "மக்கள் சேவையே மகேசன் சேவை"

இந்து சமயம், ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் சோதிக்கத்தக்கதன்று. இந்து சமயம் மனித வாழ்வில் இரண்டறக் கலந்து பயிலப்பட வேண்டியது. அனுபவித்து உணர வேண்டியது.

உங்கள் சந்தேகங்களுக்கு ஐயமறத் தெளிந்த பதிலை தரத்தக்கவனே உண்மையான சமயவாதி, அவனே சீரிய வழிகாட்டி. அத்தகையவனே, சொல்லும் செயலும் ஒன்றாகியவனே நல்ல சற்குரு. உங்கள் ஞானக் கண்ணை எவன் திறக்கிறானோ அவனே சிவமயம் ஆனவன்.

ஆன்மீக வாதி ஆன்மநேய ஒருமைப்பாட்டாலும், அன்பினாலும் முழு உலகையும் ஆழ்பவன்.

"தன்னுயிர் போல் மன்னுயிரை நேசிப்பது" அவனது வாழ்க்கை நெறி.

அன்பு, கருணை, அகிம்சை, ஈகை, சமரசம், என்பவை அவனது உதிரத்தோடு கலந்த பண்புகள்.

ஆன்மீகவாதிக்கு அச்சம் கிடையாது, அழுக்காறு கிடையாது, ஆணவம் கிடையாது, நோய்பிணி கிடையாது, என்றும் ஆனந்தமாக இருப்பவன். மற்றவர்களையும் ஆனந்தமாக இருக்கச் செய்வான். அத்தகைய உதார புருஷனே சிவத்தை தன்னுள் கண்டு தெளிந்த சீவன். சிவதொண்டன். அவன் இன்று எங்கு மறைந்தான்?

சிந்தியுங்கள், தேடுங்கள், அவனை உங்களிடமே காண முயலுங்கள். இருட்டறையில் முடங்கிக் கிடக்கும் அந்த உத்தமனை, துயில் எழுப்பி உங்களிடம் இருந்து வெளிப்படச் செய்யுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்திய சமரச சன்மார்க்க நெறியே சிவநெறி. அதைப் போதிப்பதே சைவ சமயம். சகல தோற்றங்களிலும், சகல உயிர்கள் இடத்திலும் அந்தராமியாய் இருக்கும் இறையை, செம்பொருளை கண்டு போற்றும் புதியதோர் உலகம் செய்வோம். அங்கு மதமான பேயை அழிப்போம்.

அன்புமயமாக வாழ்வோம். வாழ்க வையகம், வளர்க நீதி.

- அடியார்க்கடியன்.

## தன்னை அறிந்தால் தவம் வேறில்லை

தன்னை அறிந்தால் தவம்வே றில்லைத்
தன்னை அறிந்தால் தானவே றில்லைத்
தன்னை அறியச் சகலமு மில்லைத்
தன்னை அறிந்தவர் தாபத ராமே.

பொன்னை யன்றிப் பொற்பணி யில்லை
என்னை யன்றி ஈசன்வே றில்லை
தன்னை யன்றிச் சகம்வே றில்லை
தன்னை அறிந்தவர் தத்துவா தீதரே.

ஆதியும் இல்லை அந்தமும் இல்லை
நீதியும் இல்லை நெறியும் இல்லை
சாதியும் இல்லை சமயமும் இல்லை
ஓதி உணர்ந்தவர் உறுதி மொழியே.

நன்மையும் தீமையும் நங்கட் கில்லை
தொன்மையும் புதுமையும் தூயோர்க் கில்லை
அன்னையும் தந்தையும் ஆன்மாவுக் கில்லை
சொன்ன சுருதியின் துணிபிது வாமே.

- யோகர் சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதப் பிறவி

பிறவிகளில் எல்லாம் மேலானது மனிதப் பிறவி என்பது உலகறிந்த விடயம். அப்பிறப்பை பெற்ற மனினை ஆன்மா என்று அதன் சிறப்புக் கருதி அழைப்பார்கள். அதாவது பரமாத்மா என்று சொல்லப்படும் பேராற்றலின் இருப்பிடமாக அமைந்த பிறவி என்பது பொருள்.

இறை நிலை அடைந்து இறை மயமாகிய அவனுடைய ஆனந்த ரூபத்தைத் தன்னுள் கண்டு களித்ததால், வாழ்வே மாயம் என்று மனிதப் பிறவியின் நிலையாமையை பேசிய மறைநீக்கியார் மனிதப் பிறவியே உலகில் மிகவும் வேண்டப்படுவது என்கிறார்.

இவ் ஆன்மா என்றால் என்ன?

அதை முதலில் அறிந்து தெளிதல் வேண்டும். அதற்கு முதலில் தேவைப்படுவது உண்மையை அறிந்துகொள்ள வேண்டும் என்ற தேடல்.

அந்த எண்ணம் பிறப்பதற்கு "மனம்" வேண்டும். அதனால் "எண்ணங்கள் பிறக்க ஆதாரமாக இருப்பது மனம்"

எண்ணங்கள் பிறப்பதால் மட்டும் எவ்விடயத்திலும், தெளிவு வந்துவிடாது.

பிறந்த எண்ணங்கள் உருவெடுக்க "அறிவு" வேண்டும். அதனால் "எண்ணங்கள் உருவெடுக்க ஆதாரம் அறிவு"

உருவெடுத்த எண்ணங்கள் தெளிவுபெறச் "சிந்தனை" வேண்டும். அதனால் "எண்ணங்கள் தெளிவுபெற ஆதாரம் சிந்தனை"

தெளிந்த எண்ணங்கள் செயற்பட ஒரு "உடல்" வேண்டும். அதனால் "எண்ணங்கள் செயலுருப்பெற ஆதாரம் உடல்"

எண்ணங்களைச் செயற்படுத்தும் உடல் இயங்க உயிர் வேண்டும். அதனால் "உடல்களுக்கு ஆதாரம் உயிர்"

ஆதலால் அனைத்து முயற்சிக்கும் ஆதாரமான உயிர் வாழ்வதற்கு ஒரு உடல் வேண்டும்.

அதனால் "உயிருக்கு உடலும், உடலுக்கு உயிரும் ஆதாரம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலில் துவங்கிய வேடம் உயிர்க்காகா
உடல்கழன் றால்வேடம் உடனே கழலும்
உடலுயிர் உண்மையென் றோர்ந்துகொள் ளாதார்
கடலில் அகப்பட்ட கட்டையொத் தாரே.

இந்த உடலும் உயிரும் சகல ஜீவன்களுக்கும் இருக்கின்றன. ஆனால் அவற்றை ஆன்மாவாக கணிப்பதில்லை.

ஆதலால் "உடலும் உயிரும் மட்டும் ஆன்மாவாகாது."

எதையும் பகுத்து அறிந்து செயல்படுத்தும் திறமை வேண்டும். அதை மனம், புத்தி, சித்தம், ஊக்கம் (ஆங்காரம்) என்பன உருவாக்குகின்றன.

இவை நான்கும் கண்ணால் காணவோ, காதால் கேட்கவோ, மூக்கால் முகரவோ, வாயால் சுவைக்கவோ, உடலால் பரிசிக்கவோ முடியாதவை.

சகல சீவராசிகளும் உலவை அறிவதற்கும் நுகர்வதற்கும் காரணமான ஐந்து பேரறிவிற்கும் அறிவதற்கு அரியதாய் மறை பொருளாய் விளங்கும் இவற்றை, "அந்தக் கரணங்கள்" என்றார்கள் சமயவாதிகள். இவற்றின் நிறைவாற்றல் காரணமாகப் "பூரணம்" என்றார்கள் சித்தர்கள்.

இத்துணை ஆற்றல் இருப்பினும் இப் "பூரணம்" செயற்படு வதற்கு ஒரு மனித உடலும், அதை இயக்க உயிரும் தேவை. அதனாலேயே "மானிடராகப் பிறத்தல் அரிது" என்றாள் ஔவை.

"ஞானகரணம் ஆன்மா" என்கிறது தர்க்கசங்கிரகம்.

மானிடராகப் பிறந்த ஆன்மா, தன்னை உணர்ந்து அடங்கும் போது பேரின்பத்தையும், மன அமைதியையும் உணர்கிறது. அதுவே உலகை நினைந்து அடங்காது விரிந்து புறத்தே திரியும்போது சிற்றின்பத்தையும் அமைதி இன்மை யையும் உணர்கிறது.

இவை இரண்டையும் உணராது செயலற்று நிற்கையில் அதுவே சமாதி நிலையில் மரணமற்ற பெரு நிலையடைகிறது. அந்நிலையை அடைந்தவனே ஜீவன் முத்தன். அவனே சிவன்.

- அடியார்க்கடியன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org